1987 ஏப்ரல் 25]

குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

505 (*வினா எண். 13570). திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக்காக ஆகும் செலவு எவ்வளவு?

(ஆ) மாணவர்களுக்கு சீருடை வழங்குவது போல் குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளுக்கும் சீருடை வழங்கும் திட்டம் உள்ளதா?

(இ) சத்துணவுத் திட்டத்தினை தனி இலாக்காவாக பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சத்துணவுக்காக ஆகும் செலவு வருடத்திற்கு சுமார் ரூ. 175 கோடி.

(ஆ) இல்லை.

(இ) சத்துணவுத் திட்டத்தினை தனி இலாக்காவாக பிரிக்கலாமா என்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10.20)

திரு. டி. எம். வெங்கடாசலம் தலைவர் அவர்களே, சத்துணவுக்காக ரூ. 175 கோடியை புரட்சித் தலைவர் அரசு செலவு செய்கிறது. இங்கே மாணவர்களுக்கு சீருடை வழங்குகிறார்கள். அதேபோல், கிராமங்களில் இருக்கின்ற ஏழை எளிய குழந்தைகள் எல்லாம் ஆடைகள் இல்லாமல் அங்கே அவதிப்படுகின்ற சூழ்நிலையை நாங்கள் பார்க்கிறோம். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு எல்லாம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே சீருடை வழங்கி நல்வாழ்வுக்கு ஏற்பாடு செய்யுமா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அது மறு பரிசீலனை செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கு வருகின்ற எல்லா குழந்தைகளுக்கும் இப்போது நாம் சீருடை வழங்கிக் கொ இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் எந்தக் குழந்தை பற்றிச் சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகத்திலே இருக்கின்ற குழந்தைகளுக்கு சீருடை வழங்குவதைப் பற்றி மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகத்திலே இருக்கின்ற குழந்தைகளுக்கும் சீருடை வழங்கவேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள் வரப்பெற்று, அது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களிலிருந்து, துணை மையங்களாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பது—குழந்தைகள் குறைவாக இருக்கிற காரணத்தால் துணை மையங்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த மையங்கள் ஆண்டு கால அளவில், 100 எண்ணிக்கைக்கு மேலாக இருக்கிற குழந்தைகள் வருகிறபடியால், அதையே மெயின் சென்டராக ஆக்குவதற்கான, மேம்பாடு அடைவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 குழந்தைகளுக்குக் குறையாமல் இருந்தால் ஒரு மையம் ஆரம்பிக்கலாம். 30 அல்லது 40 குழந்தைகள் இருக்கின்ற இடங்களிலேதான் துணை மையங்களை நாம் நிறுவியிருக்கிறோம். அந்த 40 குழந்தைகள் இருக்கிற இடம், திடீரென்று 100 குழந்தைகள் இருக்கிற மையங்களாக மாறுகின்றது என்றால், ஜனத்தொகை வேகமாகப் பெருகுகிறது என்று பொருள். ஆகவே, அரசாங்கத்தினுடைய திட்டத்துடன் நாம் ஒத்துழைக்கவேண்டும். ஆனாலும், அவர்களுக்கு அந்த மையங்கள், நிரந்தர மையங்களாக இல்லாவிட்டாலும் சமைக்கின்ற இடத்திலிருந்து கொண்டு போய் கொடுப்பதை எந்தக் காரணத்தை முன்னிட்டும் நிறுத்தாமல் இந்த அரசு வழங்கிக் கொண்டே இருக்கும்.

திருச்சி—தஞ்சை நெடுஞ்சாலையிலுள்ள குவளை வாய்க்கால்

506. (*வினா எண். 3988). திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி- தஞ்சை நெடுஞ்சாலையில் திருவெறும்பூர் பகுதியில் ஓடுகின்ற குவளை வாய்க்காலில் மழைக் காலங்களில் உடைப்பு ஏற்பட்டு, திருவெறும்பூர், வேங்கூர், நடராஜபுரம், அரசங்குடி ஆகிய ஊர்களில் உள்ள விளைநிலங்கள் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்த வாய்க்காலை அகலப்படுத்தி பாதிப்பு ஏற்படாமல் தடுக்க அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS